Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, SEPTEMBER 13, 2022

செவ்வாய்க்கிழமை செப்டெம்பர் 13, 2022 | ஒளி: 08 கதிர்: 098 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## முட்டை கைத்தொழில் முடங்கும் அபாயம்

### அமைச்சர் அமரவீரவிடம் சங்கங்கள் எடுத்துரைப்பு



முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து, நுகர்வோர் விவகார அதிகார சபையால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் காரணமாக, முட்டை கைத்தொழில்துறை, வீழ்ச்சியின் விளிம்பில் இருப்பதாக சங்கங்கள் தெரிவித்தன.

தொடர்ச்சி P2

## தேசிய பொறிமுறைகளை அங்கிகரிக்க வேண்டும்

### சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா உள்ளிட்ட நாடுகள் ஐ. நாவில் வலியுறுத்து

இலங்கையின் தேசிய இறையாண்மையை ஆதரிப்பதாகவும்,மனித உரிமைகள் பேரவை இலங்கையின் இறையாண்மையை மதிப்பது "அடிப்படையில் கட்டாயம்" எனவும், இலங்கையின் உள்நாட்டு பொறிமுறைகளை அங்கிகரிக்குமாறும் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா உள்ளிட்ட ஏனைய ஆபிரிக்க மத்திய கிழக்கு நாடுகள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தியுள்ளன.

தொடர்ச்சி P2





சர்வதேச விசாரணை மூலம்

# பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும்

கடந்தகால மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த இலங்கை தவறியுள்ள நிலையில், மனித உரிமைகள் மீறல்களுக்கு இலங்கை பொறுப்புக்கூற வேண்டும் எனவும் ஐ.நா மனித உரிமைகள் பதில் ஆணையாளர் நாடா அல்-நஷிஃப் தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51வது கூட்டத்தொடர் நேற்று (12) ஆரம்பமான நிலையில், இலங்கை தொடர்பில் அறிக்கையின் சாராம்சத்தை வாசிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், தண்டனையில் இருந்து விடுபடுவதற்கு எதிர்த்துப் போராடுவதற்கான முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆழமான, ஜனநாயக மற்றும் பாதுகாப்புத்துறை சீர்திருத்தங்களை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.


தொடர்ச்சி P2

## 46/1 பிரேரணையை நிராகரிக்கிறோம்




இலங்கை தொடர்பிலான தீர்மானத்தின் உள்ளடக்கம், குறிப்பாக அதன் செயற்பாடு குறித்து இலங்கை மக்களின் இறையாண்மை, ஐ.நா சாசனத்தின் கோட்பாடுகளை மீறுவதாக நாங்கள் தொடர்ச்சியாக எடுத்துரைத்துள்ளோம். மீண்டுமொருமுறை,

தொடர்ச்சி P2



காலி கோட்டை போராட்டம்

## சட்டத்தரணிகளின் மனுவை மார்ச் 14 பரிசீலிக்க தீர்மானம்

காலி கோட்டைக்கு அருகில் கடந்த ஜூன் 29ஆம் திகதி நடத்தப்பட்ட அமைதிப் போராட்டத்தை வலுக்கட்டாயமாக கலைக்க இராணுவத்தினரை அனுப்பியமைக்கு எதிராக 11 சட்டத்தரணிகள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்களை,

தொடர்ச்சி P2



## நடிகை தமிதா அபேரத்ன பிணையில் விடுதலை

'கோட்டா கோ கம' போராட்டத்தின் தீவிரமான பங்கேற்பாளரும் நடிகையுமான தமிதா அபேரத்னவை தலா 500 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, நேற்று (12) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## கோட்டாவின் வீட்டுக்குச் சென்ற ஜனாதிபதி ரணில்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டுக்கு ஞாயிற்றுக்கிழமை (11) சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவருடன் சுமார் இரண்டு மணிநேரம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார் என 'மாலை மலர்' செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பொறுப்புக்கூறல் அவசியம்

### இந்தியா உள்ளிட்ட மேலும் பல நாடுகள் வலியுறுத்து

இலங்கை அரசியலமைப்பின் 13ஆம் திருத்த சட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் எனவும், மாகாண சபைகளுக்கான அதிகாரபகிர்வை உறுதிப்படுத்தி, மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தியுள்ளது. இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிக்கு அதிகாரப் பகிர்வும், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வும் அவசியம் எனவும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2




## சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பு; உறவினர்களும் உணவு தவிர்ப்பு

■ வி. நிதர்ஷன்

கொழும்பு, மகசின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் இளைஞர்களினுடைய உறவினர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள வட மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக நேற்று (12) காலை முதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறனர்.

தொடர்ச்சி P2

இலங்கையை

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டும்

### சர்வதேச அமைப்புகள் பேரவையில் வலியுறுத்து

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை இலங்கை நிறைவேற்றத் தவறியதால், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்ல வேண்டும் எனவும் போர்க் குற்றங்களுக்கு நீண்டகாலமாக தண்டனை வழங்கப்படாதது இலங்கையில் ஊழலுக்கான சூழலுக்கு வழிவகுத்துள்ளது எனவும் சர்வதேச அமைப்புகள், மனித உரிமைகள் பேரவையில் வலியுறுத்தியுள்ளன.

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு உதவ ஆசிய அபிவிருத்தி வங்கி தயார்



இலங்கை எதிர்கொள்ளும் கடினமான சூழ்நிலையில் இருந்து மீள, பல்வேறு துறைகளின் ஊடாக உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமா தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமா உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்று (12) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோதே பணிப்பாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு மல்லிகைத்தீவில் கவனயீர்ப்பு










■ தீஷான் அஹமட்

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை பெற்றுத்தருமாறு வழியுறுத்தி, மூதூர் - மல்லிகைத்தீவு பகுதியில் நேற்று (12) திங்கட்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"100 நாள் செயல்முனைவு " எனும் திட்டத்தின்கீழ், ஒகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் 43ஆவது நாளாக மூதூர் - மல்லிகைத்தீவு பகுதியில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டத்தில், பெண்கள் அமைப்பினர்,

தொடர்ச்சி P2

மட்டு. சிறைச்சாலையிலிருந்து

## பெண் உட்பட 29 கைதிகள் விடுதலை

■ எம்.எஸ்.எம் நூர்தீன், ஜவ்பர்கான்

கைதிகள் தினத்தையொட்டி, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து பெண்ணொருவர் உட்பட 29 கைதிகள் நேற்று (12) திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

சிறிய குற்றங்களுக்காக சிறைத் தண்டனை பெற்று வந்த கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த வேண்டும்

கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த இலங்கை தவறியுள்ள நிலையில், மனித உரிமை மீறல் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சட்டங்களின் கீழ் விசாரணைகளை முன்னெடுக்க தண்டனை வழங்குவதற்கும் சர்வதேச சட்ட வரம்பின் மூலமான வழிமுறைகளைப் பயன்படுத்தல் மற்றும் நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்களுக்கு எதிராகத் தடைகளை விதித்தல் உள்ளடங்கலாகப் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய முயற்சிகளுக்கு பேரவையின் உறுப்பு நாடுகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல், கடந்தகால மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும், இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கும், பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படுவதும் கட்டமைப்பு ரீதியில் ஆழமான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம். உண்மையைக் கண்டறிவதற்கான நம்பகத்தன்மை வாய்ந்த பொறிமுறையை நிறுவுதல் உள்ளிட்ட உரிய கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு குறித்த காலவரையறையை கொண்ட நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறையை தயாரிப்பதும் அவசியமானது எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதேபோன்று இலங்கை தொடர்பில் ஐ நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆதாரங்களைத் திரட்டும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதை முன்னிறுத்தி இலங்கையின் புதிய அரசாங்கம் தேசிய ரீதியான கலந்துரையாடலொன்றை முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும். அதேபோல் அண்மைக்காலமாக இலங்கையில் இடம்பெற்ற போராட்டங்களில் கலந்துகொண்ட மாணவத்தலைவர்கள், தொழிற்சங்கவாதிகள் உள்ளிட்டோர் கைதுசெய்யப்பட்டமையும் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் மீள்பயன்பாடும் கரிசனையை ஏற்படுத்தியுள்ள நிலையில்,

அமைதிப் போராட்டங்கள் மீதான அடக்குமுறைகளையும் இத்தகைய மிகமோசமான சட்டங்களின் பயன்பாட்டையும் அரசாங்கம் உடனடியாக முடிவுக்கு கொண்டுவரவேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முன்னாள் இராணுவ அதிகாரிகள், அரச சிவில் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை மற்றும் பிரதான பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளமை, பௌத்த தொல்பொருள் சின்னங்கள் ஆராய்ச்சி என மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்புக்கள், கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்டோர், முன்னாள் போராளிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான கண்காணிப்புக்கள் மற்றும் அடக்குமுறைகள், வட, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துவரும் இராணுவமயமாக்கல் என்பன தொடர்ந்தும் தீவிர கரிசனைக்குரிய விடயங்களாகவே இருந்துவருகின்றன என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தேசிய பொறிமுறைகளை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் முன்வைத்துள்ள புதிய அறிக்கை தொடர்பிலான விவாதத்தில் வெனிசுலா,வியட்நாம், நைஜீரியா, நிகரகுவா, கமரூன், உகண்டா, கென்யா, பொலிவியா உள்ளிட்ட நாடுகள் இதனை தெரிவித்துள்ளனர்.

மனித உரிமைகளை வெளிப்படுத்துவதில் பேரவையுடன் இணைந்து செயற்படுவதிலும் இலங்கை தனது முழு அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியதாகவும், இந்த நிகழ்ச்சி நிரலில் இலங்கையை இணைத்துக்கொள்வதற்கு எந்த காரணமும் இல்லை எனவும் கூறியதுடன், இலங்கையில் இவ்வாறான தலையீட்டு அணுகுமுறையை கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

அதேபோல், மனித உரிமைகளை உறுதிப்படுத்தவும், மனித உரிமைகள் பேரவையுடன் இணைந்து செயற்படுவது குறித்து இலங்கையின் வலுவான அர்ப்பணிப்பை அங்கிகரிப்பதாகவும், இழப்பீடுகள் மற்றும் காணி விடுவிப்பு உள்ளிட்ட தேசிய நல்லிணக்கத்துக்கான இலங்கையின் முயற்சிகளை பாராட்டுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

46/1 தீர்மானம் அரசியல் மயமாக்கலின் விளைவு எனவும் அதேபோல் மனித உரிமைகள் பேரவை இலங்கையின் இறையாண்மையை மதிப்பது "அடிப்படையில் கட்டாயம்" எனவும் தெரிவித்தனர். ஐ.நா சாசனத்தின் படி நட்புறவுகளை கவுன்சில் ஊக்குவிக்க வேண்டும் என்றும் உள்நாட்டு வழிமுறைகளில் தலையிடக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைக்கு தனது முழுமையான ஆதரவை வழங்குவதாகவும், இலங்கையின் உள்நாட்டு பொறிமுறைகளை அங்கிகரிக்குமாறு பேரவைக்கு அழைப்பு விடுப்பதாகவும். இந்த ஈடுபாட்டை ஆழப்படுத்தவும், தேசிய பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுக்கவும் இடமளிக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர். இலங்கையில் மனித உரிமைகள் நிலைமையை நாடகமாக்க விரும்பவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களின் அமைதியான போராட்டத்தின் போது வன்முறையாளர்களுக்கு எதிராக இலங்கை நிதானத்தைக் கடைப்பிடித்ததாகவும், தீவிரவாதிகள் மற்றும் குற்றவாளிகளின் கைதுகள் நியாயமானது எனவும் ரஷ்யா தெரிவித்தது.

## நடிகை தமிதா அபேரத்ன...

பத்தரமுல்லை தியத்த உயன பகுதியில் வைத்து, கொழும்பு வடக்கு குற்றத் தடுப்பு பிரிவினரால் கடந்த 7ஆம் திகதி கைது செய்யப்பட்ட தமிதா அபேரத்ன, 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், தமிதா அபேரத்ன சார்பில் நகர்த்தல் பத்திரத்தை நேற்று (12) பரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட நீதவான் திலின கமகே, மேற்குறிப்பிட்ட உத்தரவை பிறப்பித்தார்.

இதேபோன்ற மற்றொரு சம்பவம் தொடர்பாக அவர் பிணையில் விடுவிக்கப்பட்ட போது, சந்தேகநபர் எவ்வித குற்றங்களையும் செய்யவில்லை என ஜனாதிபதி சட்டத்தரணி நியன்சி அர்செகுலரத்ன தாக்கல் செய்த நகர்த்தல் பத்திரத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## இலங்கைக்கு உதவ ஆசிய...

ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் இருதரப்பு ஒத்துழைப்பை ஏற்படுத்தக் கூடிய பல்வேறு துறைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடத் தூதுக்குழுப் பணிப்பாளர் சென் சென், பிரதிப் பணிப்பாளர் உத்சவ் குமார் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## சிறைச்சாலையில் உணவுத்...

2019ஆம், 2020ஆம் ஆகிய காலப்பகுதிகளில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 12 பேர், தமது விடுதலையை வலியுறுத்தி, மகசின் சிறைச்சாலையில் செப்டெம்பர் 06ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், அவர்களுக்கு ஆதரவாக இளைஞர்களின் உறவினர்களும் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை, யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் ஆரம்பித்தனர்.

"உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் உறவுகளை விடுதலை செய்", "சிறுபிள்ளைகளின் எதிர்காலத்தை சிறையில் சிதைத்து விடாதே" மற்றும் "பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை, போராட்டக்காரர்கள் தாங்கிப் பிடித்திருந்தனர்.

## சர்வதேச குற்றவியல்...

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51வது கூட்டத்தொடர் நேற்று (12) ஆரம்பமான நிலையில், இலங்கை தொடர்பில் இலங்கையில் சமத்துவம் மற்றும் நிவாரணத்திற்கான மக்கள் இயக்கம், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், உலக சுவிசேஷ கூட்டமைப்பு, மனித உரிமைகள், அபிவிருத்திக்கான ஆசிய மன்றம், சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கியாம் மறுவாழ்வு மையம் உள்ளிட்ட சில அமைப்புகள் இதனை வலியுறுத்தியுள்ளன.

தற்போதைய நெருக்கடி நிலைமைகளில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் விருப்பமின்மை காணப்படுவதாகவும், மோதலுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் மூல காரணம் "அனைத்து அரச கட்டமைப்புகளிலும் உள்ள முறையான சிங்கள பௌத்த தேசியவாதமே" என்றும் தெரிவித்தன. எதிர்ப்பாளர்கள் மீதான அடக்குமுறை, நீதி, பொறுப்புக்கூறல் கோரிக்கைகளை அரசாங்கம் கையாளத் தவறியதை கண்டிப்பதாகவும் சுட்டிக்காட்டின.

## பொறுப்புக்கூறல்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடரில் அவர்கள் இதனை வலியுறுத்தினர்.

இலங்கையில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த சர்வதேச சமூகத்தின் ஆதரவு அவசியம் என மாலத்தீவுகள் தெரிவித்துள்ளது. அதேபோல் அர்த்தமுள்ள நல்லிணக்கத்தையும் மனித உரிமைகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்குமாறு ஜப்பான் இலங்கையை வலியுறுத்தியது. நல்லிணக்கம், உண்மை மற்றும் நீதியை உறுதிப்படுத்த வேண்டும் என அயர்லாந்து வலியுறுத்தியது. அதேபோல் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதிலும், நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைத் தொடர்ந்து தடுத்து வைப்பதிலும் அதிர்ப்தியடைவதாக அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

நீதித்துறையின் சுதந்திரத்தை வலுப்படுத்தவும், மக்களின் அடிப்படை உரிமைகளை மதிப்பளிக்க வேண்டும் எனவும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது. இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியால் மிகவும் அச்சமடைந்துள்ளதாக சுவிட்சர்லாந்து தெரிவித்தது. இலங்கையில் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கான தமது உறுதிப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் உறுதிப்படுத்தியது.

நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் இல்லாததால் பின்லாந்து தங்கள் கவலையை வெளிப்படுத்தியது. மாணவர் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்தியமையால் தாங்கள் மிகவும் வருத்தமடைந்துள்ளதாகவும் தெரிவித்தது.

## முட்டை கைத்தொழில் முடங்கும் அபாயம்

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் இடையே நேற்று (12) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த வருடம் 80,000 கோழிகள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், இவ்வருடம் கோழிகளின் எண்ணிக்கை 7,000ஆக குறைந்துள்ளதால், எதிர்காலத்தில் முட்டை மற்றும் கோழிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டனர்.

கலந்துரையாடலின் போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில், இந்த வருடம் ஜூலை மாதம் வரை முட்டை உற்பத்தி 164 மில்லியனாகவும் கோழி இறைச்சி உற்பத்தி 18 மில்லியன் தொன்களாகவும் குறைந்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், விலங்கு உணவுகளின் விலை அதிகரிப்பு மற்றும் இரசாயன உரங்கள் மீதான தடை காரணமாக சோள உற்பத்தி குறைவடைந்தமை என்பன விலங்குணவு தட்டுப்பாட்டுக்கு வழிசமைத்ததாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கோழிப் பண்ணை மற்றும் முட்டை உற்பத்தித் தொழிலைப் பாதுகாப்பதற்கான கூட்டுத் திட்டத்தை கால்நடை பாதுகாப்பு திணைக்களம், நுகர்வோர் அதிகாரசபை மற்றும் தனது தலைமையின் கீழ் உருவாக்குமாறு விவசாய அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் அறிவித்துள்ளார்.

## கோட்டாவின்...

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதால் பொதுமக்கள் போராட்டத்தில் குதித்தனர். இதனால் அந்நாட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடினார்.

மேலும் ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த அனைவரும் பதவியை விட்டு விலகினர். இலங்கை நெருக்கடியை தீர்க்க புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்றார்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தாய்லாந்தில் தஞ்சம் அடைந்திருந்த கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை திரும்பினார்.

அவர் தற்போது கொழும்பில் உள்ள அரசு பங்களாவில் தங்கி உள்ளார்.

பொதுமக்கள் மீண்டும் அவருக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடாமல் இருக்கும் வகையில் பங்களாவை சுற்றி பாதுகாப்புக்காக இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு உள்ளனர். அவரை பாதுகாக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்து உள்ளது.

இதற்கிடையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோட்டாபய ராஜபக்ஷ தங்கி உள்ள வீட்டுக்கு நேற்று (11) நேரில் சென்று சந்தித்தார்.

அப்போது அவர்கள் இரண்டு பேரும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம், பொருளாதார நெருக்கடி சூழல் குறித்து பேசியதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இலங்கையில் விரைவில் 12 பேர் புதிய அமைச்சர்களாக பதவி ஏற்க உள்ளனர். இதில் மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஷவுக்கும் அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழ்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து பேசி உள்ளது சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. இதன் மூலம் மீண்டும் இலங்கையில் ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஆதிக்கம் தலை தூக்கலாம் என பொதுமக்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

## 46/1 பிரேரணையை...

தீர்மானத்தின் மீதான எந்தவொரு தொடர் நடவடிக்கைகளையும், உயர் ஸ்தானிகரின் பரிந்துரைகள் மற்றும் முடிவுகளையும் திட்டவட்டமாக நிராகரிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். 46/1 தீர்மானத்தை எதிர்ப்பதுடன் அதன் சட்டபூர்வமான தன்மை மற்றும் நோக்கங்களுடன் அடிப்படையில் உடன்படவில்லை என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51வது கூட்டத்தொடர் நேற்று (12) ஆரம்பமான நிலையில், இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் இலங்கையின் நிலைப்பாட்டை தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

எமது மக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் , ஒத்துழைப்பு மற்றும் கலந்துரையாடல் உணர்வுடன் பேரவையுடனான எமது ஈடுபாட்டைத் தொடர்வதற்கும் இலங்கையின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை வலியுறுத்துகிறேன். 46/1 தீர்மானத்தை நாங்கள் திட்டவட்டமாக நிராகரித்த போதிலும், எங்கள் உறுதிப்பாட்டிற்கு இணங்க, உயர் ஸ்தானிகரின் அறிக்கைக்கு இலங்கையின் விரிவான எழுத்துப்பூர்வ பதிலை நாங்கள் சமர்ப்பித்துள்ளோம்.

மக்கள் எதிர்கொள்ளும் சமூக-பொருளாதார நெருக்கடிகள் குறித்து அரசாங்கம் மிகவும் அக்கறை கொண்டுள்ளது, மேலும் மக்களுக்கான அத்தியாவசியமான பொருட்களை வழங்குவதன் மூலம் அவர்களின் நல்வாழ்வை உறுதிசெய்ய உடனடி நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. ஐ .எம். எப்உடன் ஊழியர்கள் மட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியம், கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதங்கள் நடந்து வருகின்றன. நெருக்கடியின் பாதகமான தாக்கங்களிலிருந்து மிகவும் பாதிக்கப்படக்கூடி யவர்களைக் காப்பாற்றுவதற்காக அரசாங்கம் இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது.

மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சுதந்திரமான முறையில் நல்லிணக்கம் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்நாட்டு நிறுவனங்கள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகள், அவை அர்த்தமுள்ளதாகவும் நிலையானதாகவும் இருக்க வேண்டுமானால், அவை சம்பந்தப்பட்ட நாட்டுடனான ஒத்துழைப்பின் அடிப்படையில் இருக்க வேண்டும். அதன் மக்களின் அபிலாஷைகளுடன் இணக்கமாக இருக்க வேண்டும். அதன் அடிப்படை சட்ட கட்டமைப்பிற்கு இணக்கமாக இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## சட்டத்தரணிகளின்...

அடுத்தவருடம் மார்ச் 14ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம், நேற்று (12) தீர்மானித்தது.

எல்.டி.பி. தெஹிதெனிய, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனுக்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்குறிப்பிட்ட பரிசீலனைத் திகதி அறிவிக்கப்பட்டது.

இந்த மனுக்களுக்கு எதிராக வரையறுக்கப்பட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் இரகசிய ஆவணம் ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாகவும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி மன்றுக்கு அறிவித்தார்.

குறித்த மனுக்களில், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ்மா அதிபர், இராணுவ தளபதி, சட்டமா அதிபர் உள்ளிட்ட பலர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஏனைய சட்டத்தரணிகளுடன் குழுவாகச் சென்று, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டம் நடத்துவதற்கும் இலங்கை அணிக்கு ஆதரவு வழங்குவதற்கும் தீர்மானித்ததாக மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

கைகளில் தேசியக் கொடிகளுடன் ஏனைய சட்டத்தரணிகள் குழுவுடன் காலி கோட்டையை அடைந்து காலி கோட்டை மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகிலுள்ள பொது நுழைவாயிலில் இருந்து காலி கோட்டைக்குள் நுழைய முயன்றதாக குறிப்பிட்டுள்ளனர்.

## அரசியல் கைதிகளை விடுதலை...

பொதுமக்கள் மற்றும் சிவில் அமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்டவர்கள், "அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும்", "எங்கள் நிலம் எமக்கு வேண்டும்", "கருத்துச் சுதந்திரம் எங்கள் உரிமை", "ஒன்றுகூடுவது எங்கள் உரிமை" மற்றும் "அரசியல் உரிமை எமக்கு வேண்டும்" உள்ளிட்ட கோஷங்களை எழுப்பியதோடு, சுலோகங்களையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது கருத்துரைத்த போராட்டக்காரர்கள், சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் எனவும் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவித்தனர். அத்தோடு, மக்களுக்கு போராடும் தமது அலுவலகம் தாக்கப்படுவதாகவும், போராட்டத்தில் ஈடுபடுவோரை புலனாய்வாளர்கள் அச்சுறுத்தும் செயற்பாடு இடம்பெறுவதாகவும் குற்றம் சுமத்தினர். இதெற்கெல்லாம் ஒரே தீர்வு அரசியல் தீர்வுதான் எனவும் கூறினர்.

## பெண் உட்பட...

மட்டக்களப்பு சிறைச்சாலை பிரதம அத்தியட்சகர் என்.பிரபாரன் முன்னிலையில் இந்தக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதில் பிரதம ஜெயிலர் மோகன் உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், நலன்புரி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# மார்ட்டின் சுன்கொங் – சபாநாயகர் சந்திப்பு



அரச அழைப்பை அடுத்து இலங்கையை வந்துள்ள அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் மார்ட்டின் சுன்கொங் நேற்று (12) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது விடுத்த அழைப்பிற்கு அமைய, அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகத்தினுடைய இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மகாராணியின் மறைவுக்கு இரங்கல்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் இரங்கல் புத்தகத்தில் நேற்று (12) கையொப்பமிட்டுள்ளார்.





# கைப்பொம்மையாக ரணில்

மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் கைப்பொம்மையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தினார். மக்களால் நிராகரிக்கப்பட்ட நிதியமைச்சரும், ஜனாதிபதியும் பிரதமரும் வெளியேறிச் சென்ற போதிலும் தற்போது அவர்களின் கைப்பாவை ஒருவரை ஜனாதிபதியாக்கி, மொட்டு அரசாங்கம் பல்வேறு தீர்மானங்களை மேற்கொண்டு, நாட்டை அழித்து வருவதாகவும் கூறினார்.

மக்கள் துன்பங்களை அனுபவிக்கும் வேளையிலும், 'காக்கை அரசாங்கம்' தமக்கு விசுவாசமாக இருப்பவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி



வருகிறது எனவும் சஜித் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சரவை அமைச்சர்கள் 20, இராஜாங்க அமைச்சர்கள் 37 மற்றும் 12 அமைச்சரவை அமைச்சர்கள் உட்பட 69 பேர் நியமிக்கப்படவுள்ளனர். மக்கள் ஆணை இல்லாத ரணில் விக்கிரமசிங்க, 134 வாக்குகளை வழங்கியவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் நன்றாக இருந்த நாட்டுக்கு சாம்பியனொருவன், வீரனொருவன், ஹீரோ ஒருவன் வேண்டும் என மக்கள் நினைத்தாலும், அந்த வீரன், ஹீரோவாக வந்தவுடனேயே இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# அரச பயங்கரவாதத்தை நிறுத்துங்கள்

## ஜெனீவாவில் புலம்பெயர் இலங்கையர்கள் போராட்டம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51வது கூட்டத்தொடர் நேற்று (12) ஜெனீவாவில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் ஜனநாயக மீறல்களை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தியும், பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் ஜனநாயக போராட்டக்காரர்கள் கைது செய்து தடுத்து







வைக்கப்பட்டிருப்பதை தடுக்கக்கோரியும், பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என வலியுறுத்தியும், அரச பயங்கரவாதத்தை நிறுத்துமாறு வலியுறுத்தியும், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கக் கோரியும் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு முன்பாக புலம்பெயர் இலங்கையர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.


## அறிவிப்பு

**மஹாவெலி கொகநட் பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி - PB 191 PQ**
**வருடாந்த பொதுக்கூட்டம் 2022**

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி கொழும்பு பங்கு சந்தையின் இணையதளமான நுஒஉாயபெந (CSE) https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=MCPL.N0000 என்று பதிவேற்றம் செய்யப்பட்ட பொதுக்கூட்ட விளம்பரம் வருடாந்த அறிக்கை ப்ராக்ஸி படிவத்தின் படிவம் ஆவணங்கள் போன்றவை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன 2022 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு எவென்ரா கார்டன் ஹோட்டல் இல. 22 கிரியுல்ல வீதி நீர்கொழும்பு என்ற இடத்தில் நடைபெறவிருக்கும் வருடாந்த பொதுக்கூட்டம் கூட்டத்தின் நோக்கத்திற்காக பங்குதாரர்களுக்கு முறையாக அனுப்பப்பட்ட ஆவணங்களாகவும் இது கருதப்பட வேண்டும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**இயக்குனர் சபையின் கட்டளையின் பிரகாரம்**
**கம்பனியின் செயலாளர்**
**கே.ஏ.எல். ரூபசிங்ஹ**
**2022 செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி**


# எவோட்ஸ்-2022 சிறுகதைப் போட்டி

புதிய அலை கலை வட்டத்தின் எவோட்ஸ் -2022க்கான கலை, கலாசாரப் போட்டித்தொடரின் வரிசையில் சிறுகதைப் போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்படுகின்றன. போட்டிக்கான நிபந்தனைகள் வருமாறு,

1) சொந்தக் கருப்பொருளில் சிறுகதை எழுதப்படலாம்.

2) சிறுகதை ஏ.4 தாளில் 2 பக்கங்களுக்குள் உள்ளடங்கியதாக இருத்தல் வேண்டும்.

3) சிறுகதை பாமினி பொன்டில் தட்டச்சு செய்து அனுப்பப்படவேண்டும்.

4) பிரதியுடன் பெயர், முகவரி,தொடர்புக்கான தொலைபேசி இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

5) ஒருவர் ஓர் ஆக்கத்தை மட்டுமே அனுப்பவேண்டும். ஆக்கம் முன்னர் ஏதேனும் ஊடகங்களிலோ பதிவாக்கங்களிலோ இடம்பெற்றிருக்க கூடாது. சிறுகதையை அனுப்பவேண்டிய இறுதித் திகதி 30.09.2022

6) அனுப்பவேண்டிய இணையவழிகள் Puthiyaalaikalaivaddam1980@gmail.com மற்றும் 075 4880172 என்ற இலக்கத்துடனான WhatsApp இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

7) வயது எல்லை 45 வயதுக்கு கீழ் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள 076 2002701, 077 6274099 மற்றும் 077 7412604 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

### மனித உரிமைகள் மீறல்களுக்காக

# ஐ.நாவுக்கு சென்றால் பொருளாதாரம் பாதிக்கும்

பா.நிரோஸ்

நாட்டில் எந்தவிதமான மனித உரிமைகள் மீறல்களும் இடம்பெறவில்லை என தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரதீப் உந்துகொட, மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் இலங்கையர்கள் ஐ.நாவுக்கு செல்வதால், பொருளாதாரம் மேலும் பாதிக்கும் எனவும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது. இவ்வாறான நிலையில், நாட்டுக்கு எதிரான யோசனைகளை முன்வைக்க சிலர் இக்கூட்டத்தொடரில் கலந்துகொள்ள இலங்கையிலிருந்து சென்றுள்ளனர்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் பணிகளுக்கு இதனால் பெரும் பாதிப்பு ஏற்படும். தற்போதைய அரசாங்கத்தின் தீர்மானங்களால் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படவில்லை. கடந்த கால அரசாங்கங்கள் எடுத்த தீர்மானங்களின் இறுதிப் பிரதிபலனாகவே பொருளாதார நெருக்கடி நாட்டில் ஏற்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் எடுக்கப்படும் தீர்மானங்களால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படலாம். குறிப்பாக ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை கிடைக்காமல் போகலாம். இதனால் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானம் குறைவடையும்.

அரச சார்பற்ற நிறுவனங்களில் பிரதிநிதிகள் பலர் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக நாட்டில் இருந்து சென்றுள்ளனர். உண்மையில் நாட்டில் மனித உரிமைகள் மீறல் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பில் நாட்டுக்குள் தீர்வைக் காண வேண்டும்.

எனவே, நாடு தொடர்பில் சர்வதேச ரீதியில் தவறான பிம்பம் தோற்றுவிக்கப்பட்டால், பொருளாதாரத்தில் அது மேலும் பாதிப்பை ஏற்படுத்தும். நாட்டில் எந்தவிதமான மனித உரிமைகள் மீறல்களும் இடம்பெறவில்லை என்று மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா நடவடிக்கை எடுக்க வேண்டும்

பா.நிரோஸ்

உலக வரலாற்றில் முதன்முறையாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை, இலங்கையின் பொருளாதாரக் கொலையாளி தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதென தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, நாட்டை வங்குரோத்தடையச் செய்தவர்களுக்கு எதிராக, மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டு உள்ளதாகவும் கூறினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆரம்பித்துள்ள நிலையில், இலங்கைக்கு தீர்மானம்மிக்க நேரமாக அமையும். குறிப்பாக யுத்த காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள்,



தொடர்பில் இலங்கைக்கு பல்வேறு அழுத்தங்களை ஐ.நா வழங்கியிருந்தது.

எனினும், தற்போது ஆரம்பமாகியுள்ள கூட்டத்தொடரில், முன்னொருபோதும் இல்லாத வகையில் நாட்டின் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள மனித உரிமைகள் மீறலுக்குப் பொறுப்புக்கூறல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பார் எனவும் கூறினார்.




கல்முனையில் தனியார்

# கல்வி நிலையங்கள் ஒழுங்குபடுத்தல்

## கட்டணம், நேரம் தொடர்பிலும் கட்டுப்பாடுகள் விதிப்பு

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லையினுள் இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

இதனைக் கவனத்தில்கொண்டு, தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கல்முனை மாநகர மேயர் ஏ.எம்.றகீப், நேற்று (12) வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இப்பிரதேசங்களில் தனியார் கல்வி நிலையம் ஒன்றை நடத்துவதாயின் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விதிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை மாநகர சபை வெளியிட்டியிருப்பதுடன், இவ்விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு வியாபார உத்தரவுப்பத்திர அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் கடல் அனர்த்த பாதுகாப்பு எல்லையிலிருந்து 100 மீற்றருக்கு அப்பால்



அமைக்கப்பட்டிருப்பதோடு, அனர்த்தங்கள் ஏற்படும்போது மாணவர்கள் இலகுவாக வெளியேறக்கூடிய நுழைவாயில்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பிரத்தியேக வகுப்புகள் காலை 08 மணி தொடக்கம் பி.ப 01 மணி வரையும் பிற்பகல் 3.15 மணி முதல் பிற்பகல் 6.15 மணி வரையுமே நடத்தப்பட வேண்டும்.

வகுப்புகள் நடத்தப்படுகின்ற கட்டடம் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக, திறந்த காற்றோட்டம் உள்ளதாக அமைந்திருத்தல் வேண்டும்.

கதிரை, மேசைகள் வயது வித்தியாசத்துக்கு ஏற்ப சொகுசானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருபாலாருக்கும் உரிய மலசலகூட வசதிகள் வெவ்வேறாக அமையப் பெற்றிருத்தல் வேண்டும். மலசல கூட வசதியானது 25 மாணவர்களக்கு ஒன்று என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மாணவர்களுடைய வாகனங்கள், சைக்கிள்களை பாதையோரங்களில் நிறுத்தி வைத்து, பொதுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக் கூடாது.

பாடசாலையில் பரீட்சை மற்றும் தவணை விடுமுறை வழங்கப்பட்டு, கட்டாயம் ஆகக்குறைந்தது ஒரு வாரகாலத்துக்கு பின்னரே தனியார் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். மாதத்தில் வரும் எந்தவொரு பொது விடுமுறை தினத்திலும் வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளைகளிலும் வகுப்புகளை நடத்தக் கூடாது.

கற்பிக்கின்ற பாடங்களின் நேர அட்டவணைகள், ஆசிரியர்களின் விவரங்கள் என்பன உறுதிப்படுத்தப்பட்டு, கல்முனை மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகளை கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென மேயர் அறிவித்துள்ளார்.



காட்டு யானை தாக்கி

# குடும்பஸ்தர் உயிரிழப்பு

### மூன்று நாட்களின் பின் சடலம் மீட்பு

■ ஹஸ்பர்

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்ச நகர் பகுதியில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்மெடியாவ தெற்கை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பியதிஸ்ஸ பண்டார (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை விறகு எடுக்கச் சென்றவர் மூன்று நாட்களாகியும் வீடு திரும்பாததால் அவரை தேடிச் சென்ற வேளையிலேயே ஈச்சக்குளத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் (11) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மூன்று நாட்கள் கடந்தமையால் உயிரிழந்தவரின் உடல் உறுப்புக்கள் சிதைந்து காணப்பட்டதுடன், சில பகுதிகள் காட்டு மிருகங்களால் வேட்டையாடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக தம்பலகாமம் பொலிஸார், கந்தளாய் திடீர் மரண விசாரணை அதிகாரி உள்ளிட்டோர் சடலம் காணப்படும் இடத்துக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சைக்கிளில் பயணம் செய்த

# இளைஞர்கள் கௌரவிப்பு

■ அதிரன், வ.சக்தி, எம்.எஸ்.எம் நூர்தீன்

இலங்கையின் கரையோர பிரதேசங்களூடாக சைக்கிளில் சுற்றி கடல் மற்றும் கரையோர பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், "ஓசோன் ரைட்" எனும் கருப்பொருளில், மட்டக்களப்பிலிருந்து 1,300 கிலோ மீற்றர் பயணம் மேற்கொண்ட மட்டக்களப்பின் இளைஞர்கள் இருவருக்கும் பயண நிறைவு வரவேற்பும் கௌரவிப்பும், கல்லடி கடற்கரையில் நேற்று முன்தினம் (11) மாலை நடைபெற்றது.

"Ocean biome" அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிகுடி பழைய மாணவரான அனாமிகன் குமாரசிங்கம் மற்றும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி பழைய மாணவரான சஞ்ஜீவன் அமலநாதன் ஆகியோரின் பெற்றோர், நண்பர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எர்.ஆர்.குமாரசிறி கலந்துகொணடார்.

கடல் சுற்றுப்புறச் சூழலையும் கடல் வளத்தையும் பாதுகாப்பதற்காக சமூகத்தில் பல்வேறு வேலைத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தும் நோக்கில், "Ocean biome" அமைப்பு இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை சைக்கிளில் பயணம் செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயணம் கடந்த முதலாம் திகதி ஆரம்பமானது.

இரு சைக்கிள் ஓட்டிகளும் 11 நாட்கள் கொண்ட நீண்ட சைக்கிள் சவாரியை மேற்கொண்டார்கள்.

இப்பயணத்தின் நோக்கமானது கடல் பாதுகாப்பை மேம்படுத்துவதும் கடலை பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து உள்ளூர் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் கடல் வளங்களை கையாளும் போது பொறுப்பை உருவாக்குவதுமாகும்.




தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில்

# மருத்துவ பீடம் அமைக்க முஸ்தீபு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டடு வருவதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், நேற்று (12) தெரிவித்தார்.

மருத்துவ பீடத்துடன் இணைந்ததாக மருத்துவ கற்கைநெறிகளை பயில்வதற்கு அம்பாறை பொது வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும்



அவர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில், பல்கலைக்கழகத்தின் உறுப்பினர்கள், சுகாதார உயர் மட்ட அதிகாரிகள் உள்ளிட்ட உயர்மட்ட குழுவினர், அம்பாறை பொது வைத்தியசாலைக்கு சென்று, மருத்துவ அபிவிருத்தி பீடத்தின் அபிவிருத்தி தொடர்பாக மீளாய்வு செய்தனர். குறித்த குழுவினர், தமது மீளாய்வு அறிக்கை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கனை அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜே.எம்.ஏ. டக்ளஸுடன் கலந்துரையாடியுள்ளனர்.

கோணேஸ்வரர் கோவில்

# ஆக்கிரமிப்புக்கு எதிர் நடவடிக்கை

### இந்துமாமன்றம் தீர்மானம்

■ எம்.றொசாந்த்

திருக்கோணேஸ்வரர் கோவில் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராக தமது கண்டனங்களை பதிவு செய்வதுடன், ஆக்கிரமிப்புக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்பது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - நல்லூர் கோவில் வீதியில் அமைத்துள்ள அகில இலங்கை இந்து மா மன்றத்தின் பிராந்திய அலுவலகத்தில், நல்லை ஆதீன முதல்வரின் தலைமையில், நேற்று முன்தினம் (11) கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, கோணேஸ்வரர் கோவில் பகுதிகளில் பெரும்பான்மையினருக்கு வர்த்தக



நிலையங்கள் அமைப்பதற்கு இடம் வழங்குதல், வர்த்தக நிலையங்களை அமைத்துக் கொடுத்தல், தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் மற்றும் தடைகள் தொடர்பில் பேசப்பட்டன.

குறித்த செயற்பாடுகளுக்கு எதிராக தமது கண்டனங்களை பதிவு செய்வதுடன், அவற்றுக்கு எதிரான நடவடிக்கைளை தொடர்ந்து முன்னெடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், த. சித்தார்த்தன் ஆகியோரும், கோணேஸ்வரர் கோவில் நிர்வாக சபையினர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.









## மூன்றாவது நாளாகவும்...

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி, நாடளாவிய ரீதியில் வாகன வழிப் போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை, யாழ்ப்பாணத்தில் மூன்றாவது நாளாகவும் (12) வடமராட்சியில் நேற்று இடம்பெற்றது.

வல்லை முனியப்பர் கோவில் முன்பாக தேங்காய் உடைத்து வாகன வழிப் கையெழுத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியினுடைய வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் முன்னெடுத்த கையெழுத்து திரட்டும் பிரச்சார நடவடிக்கையின் மூன்றாவது நாள், வடமராட்சி பகுதிகளில் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: வி. நிதர்ஷன்)

வட்டுக்கோட்டையில்

# பூசணிக்காய் திருடன் கைது

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பகுதியில் பூசணிக்காயை திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் 40 கிலோ கிராம் பூசணிக்காய் களவாடப்பட்டிருந்தது.

அது தொடர்பில் தோட்டக்காரரால் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, வட்டுக்கோட்டைக்கு அருகில் உள்ள மூளாய் பகுதியில் நபரொருவர் 40 கிலோ கிராம் பூசணிக்காயை ஒரு கிலோ கிராமுக்கு 70 ரூபாய் வீதம் விற்பனை செய்ததாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில், பூசணிக்காயை விற்ற நபரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



உலர் வலய விவசாயத்தில்

# எட்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு

### கிளிநொச்சியில் நாளை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தால் வருடாந்தம் நடத்தப்படும் உலர்வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாடு, கிளிநொச்சி, அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள விவசாயபீட மாநாட்டு மண்டபத்தில் நாளை புதன்கிழமை (14) நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாயபீடம், வடக்கு - கிழக்கை மையப்படுத்தி உலர்வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆய்வு மாநாடு ஒன்றை 2015ஆம் ஆண்டு முதல் வருடம் தோறும் நடத்தி வருகிறது. அந்த வரிசையில், அதன் எட்டாவது மாநாடே நாளை நடைபெறவுள்ளது.

"உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்காக வளர்ந்து வரும் பொருத்தமான விவசாயத் தொழில்நுட்பங்கள்" என்ற தொனிப் பொருளில் நடைபெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

முல்லைத்தீவில்

# உலர் உணவு பொதிகள் வழங்கிவைப்பு

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் இராணுவத்தினரின் ஏற்பாட்டில், சிங்கப்பூர் நாட்டில் உள்ள பௌத்த நூலக நிதிப்பங்களிப்பில் 125 வறிய குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள், நேற்று (12) வழங்கிவைக்கப்பட்டன.



புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள 68ஆவது படைப்பிரிவின் 2ஆவது படைத் தலைமையகத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

சிங்கப்பூர் நாட்டின் பிரதான சங்க நாயக்கராக இருக்கின்ற கடுகண்ணாவ பாரமித்த தியான நிலையத்தின் தலைவரும் வெல்லம்வெல றஜமாக விகாரையின் விகாரபதியுமான வெல்லம்வெல தம்மரத்தின நாயக்கதேரர், கொழும்பு ராஜகிரிய வித்தியாலத்தின் பௌத்த மாணவர் சங்கத் தலைவர் கவகிரியே பிரேமரத்தின சங்கநாய, முல்லைத்தீவு மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சஞ்சேய் ரணசிங்க மற்றும் 68ஆவது படைஅணி கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் றொகான் பென்னம்பெருமா உள்ளிட்ட அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.



ஆயுதங்களுடன் சென்ற லொறி

# மஹியங்கனையில் விபத்து

■ ஷேன் செனவிரத்ன

குண்டசாலை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிலும் புதிய அதிகாரிகளுக்கு ஆயுதப்பயிற்சி வழங்குவதற்கான ஆயுதங்களை ஏற்றிச் சென்ற லொறி, கண்டி - மஹியங்கனை வீதியின் 18ஆவது கொண்டை ஊசி வளைவின் 11ஆவது வளைவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த லொறியில் துப்பாக்கி சுடும் பயிற்சிக்கான ரி-56 ரக துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் என்பன கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

லொறி, நேற்றைய தினம் (12) விபத்துக்குள்ளான போது அதில், உதவி பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட 4 பேர் பயணித்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த உதவி பொலிஸ் பரிசோதகர் சிகிச்சைக்காக மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதிய பொலிஸ் அதிகாரிகளின் பயிற்சிக்காக மஹியங்கனை, வெடி தலாவ பகுதியில் இருந்து ஆயுதங்களை கொண்டு சென்ற லொறியே விபத்தில் சிக்கியதாக பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

தோட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக

# ரூ.20 ஆயிரம் வழங்க வேண்டும்

**இராதா எம்.பி வலியுறுத்தல்**



■ நீலமேகம் பிரசாந்த்

தீபாவளி பண்டிகையை மிக நெருக்கடியான சூழ்நிலையில் கொண்டாட வேண்டிய சூழ்நிலைக்கு தேயிலை தோட்ட தொழிலாளர்கள் உள்ளாகியுள்ளனர் என தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன், எனவே தோட்டத்தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக இருபதாயிரம் ரூபாயை வழங்க தோட்ட கம்பனிகள் முன்வர வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், நாட்டில் காணப்படுகின்ற பொருட்களின் அதியுச்ச விலையேற்றத்தால் பெருந்தோட்ட தொழிலாளர்கள் மிகப்பெரிய நெருக்கடியை சந்தித்து வருகின்றனர்.

நாட்டில் தற்போது விலைவாசி நாளுக்கு அதிகரித்த வண்ணமே உள்ளது. மிக வேகமாக அதிகரிக்கப்பட்ட பொருட்களின் விலை, ஆமை வேகத்திலேயே குறைப்படுகின்றது.

இந்நிலையில் தோட்ட தொழிலாளர்களின் வருமானத்தில் மிக சந்தோஷமாக தீபாவளி பண்டிகையை கொண்டாட முடியாத சூழ்நிலைக்கு தோட்ட தொழிலாளர்கள் உள்ளாகியுள்ளனர்.

எனவே, பெருந்தோட்ட கம்பனிகள் அனைத்தும் ஒன்றிணைந்து, நாட்டில் காணப்படுகின்ற பொருட்களின் விலையேற்றத்தை கருத்தில் கொண்டு, தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு ரூபாய் இருபதாயிரத்தை வழங்க முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.





## விநாயகருக்கு விசேட பூஜை



இராகலை, டெல்மார் தோட்ட முருகன் ஆலயத்தில் அண்மையில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்ட விநாயகர் சிலைக்கு, விசேட பூஜை நேற்று (12) காலை நடைபெற்றது. (ஆ. ரமேஸ்)

# குயில் வத்தை வீதி தாழிறங்கியது

■ சுதத் எச்.எம்.ஹேவா

கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியின் குயில் வத்தை பகுதியிலுள்ள வீதியின் ஒருபகுதி தாழிறங்கியுள்ளது.

வீதியின் ஒருபகுதி தாழிங்கியுள்ள காரணத்தால், மற்றைய பகுதியை போக்குவரத்துக்காக மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த வீதி மேலும் தாழிறங்கும் அபாயம் காணப்படுவதால் அந்தப் பகுதியூடாக வாகனங்களை செலுத்தும் அனைத்து சாரதிகளையும் அவதானமாக இருக்குமாறு அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.





# விபத்தில் சிக்கிய இளைஞன் வீதியோரத்தில் சடலமாக மீட்பு

## சந்தேகநபர்களைத் தேடி வலை

■ எஸ்.கணேசன், ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியின் கொட்டகலை மேபீல்ட் சந்தியில் வீதி ஓரத்தில் இருந்து பலத்த காயங்களுடன் நேற்று (12) காலை மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக திம்புள்ளை பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மொரஹல, பலாங்கொடை, மெதகமமெத்த பகுதியைச் சேர்ந்த நதீர சம்பத் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர், தலவாக்கலை பிரதேசத்தில் உள்ள மீன் கடையொன்றில் பணிபுரிந்து வந்தவர் என்று தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மீட்கப்பட்ட சடலத்தில் பல காயங்கள் இருந்ததாகவும், அருகில் இருந்த கடை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெராவில் அந்த நபர் விபத்தில் சிக்குவது பதிவாகியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த விபத்தை ஏற்படுத்திய நபர்கள் தொடர்பில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (11) இரவு 11 மணியளவில் ஹட்டன் கொட்டகலை கொமர்ஷல் சந்தியில், காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்த இளைஞன் ஒருவரின் சடலம் காணப்படுவதாக பிரதேசவாசிகள் வழங்கிய தகவலின் அடிப்படையிலே பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

மேலும், நீதிமன்ற உத்தரவை பெற்று மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் சடலத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தடயவியல் பிரிவு பொலிஸாருடன் இணைந்து திம்புள்ளை பத்தனை பொலிஸார் மேற்கொண்டனர்.

தொழிற்சங்க கலந்துரையாடலை நிர்வாகம் புறக்கணிப்பதால்

# பறிக்கும் தேயிலையை ஏலத்துக்கு அனுப்புவதற்கு தடை

■ ரஞ்சித் ராஜபக்ஸ

மஸ்கெலியா தோட்டத்திற்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையை, ஏலத்திற்கு அனுப்ப வேண்டாம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் ஜீவன் தொண்டமான் தோட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பணிப்புரை வழங்கியதாக கட்சியின் உபதலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு, நாளாந்த சம்பளம் 1,000 ரூபாய் வழங்க வேண்டும் என சம்பள நிர்ணய சபையின் உத்தரவின் அடிப்படையில் தேயிலை தோட்ட நிறுவனங்கள் செலுத்தி வரும் நிலையில், மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனி, அந்த உத்தரவை மீறி, அன்றாடம் பறிக்கும் தேயிலைக்கு மாத்திரம் கொடுப்பனவு வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், தோட்டத் தொழிலாளர்களின் பல உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளதாக, இது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடுவதற்கு பல தடவைகள் வந்திருந்தும், கலந்துரையாடலில் அக்கறை காட்டாத காரணத்தால் இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கணபதி கனகராஜ் தெரிவித்தார்.




# தேய்ந்து வரும் பாண்; தேம்பி அழும் மக்கள்

■ சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரிலுள்ள சில பேக்கரிகளில் குறைந்த நிறையுடைய பாண் விற்பனை செய்யப்படுவதால் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துவருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

450 கிராம் நிறையில் இருக்க வேண்டிய ஒரு இறாத்தல் பாண், சில பேக்கரிகளில் 350 முதல் 375 கிராம் நிறையில் விற்பனை செய்யப்படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பாண் மாத்திரமன்றி சில பேக்கரிகளில் உற்பத்தி செய்யப்படும் பணிஸ்களின் நிறையும் குறைந்துள்ளதாகவும் அதன் காரணமாக சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

நிறை குறைந்த பாண் மற்றும் பணிஸை விற்பனை செய்து, அப்பகுதி மக்களை சிரமத்துக்கு உள்ளாக்கும் பேக்கரி உரிமையாளர்கள் மீது உரிய அதிகாரிகள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

விடுமுறை நாள்களில்

# நுவரெலியாவில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

■ பி.கேதீஸ்

பாடசாலை விடுமுறை காரணமாக நுவரெலியா மாவட்டத்தின் சுற்றுலாப் பகுதிகளில் கடந்த 10, 11ஆம் திகதிகளில் அதிகளவான உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர்.

விக்டோரியா பூங்கா, கிரேகரி வாவி, கால்வேஸ் பூங்கா, ஹோட்டன் சமவெளி, ஹக்கல பூங்கா உள்ளிட்ட இடங்களிலும், நுவரெலியாவிற்கு அருகிலுள்ள அம்பேவல மற்றும் பட்டிப்பொல பகுதிகளிலும் சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் காண முடிந்தது.

நுவரெலியாவிற்கு வருகை தந்த பெரும்பாலான உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் ரயில், பஸ் போன்ற பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தியதாக நுவரெலியா சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.





ஜப்பான், கொரிய

# மொழியறிவு தொடர்பான செயலமர்வு

■ பி.கேதீஸ்

ஜப்பான் மற்றும் கொரிய நாடுகளில் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஜப்பான், கொரிய மொழியறிவு தொடர்பான தெளிவூட்டல் இலவச செயலமர்வு, அண்மையில் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வு ஜப்பான்,கொரிய மொழிகளில் மிகவும் தேர்ச்சி பெற்ற வளவாளர்களால் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் வதிவிட முகாமையாளர் விஜேசிங் மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# இரண்டு அணிகளிடம் இருந்தும் அரசியல்வாதிகள் கற்க வேண்டும்

கிரிக்கெட் உலகக் கோப்பையை இலங்கை அணி, 1996இல் கைப்பற்றிய போதுதான், உலகளவில் இலங்கை பிரபல்யமடைந்தது என்று பலரும் கூறுவதை கேள்விப்பட்டிருக்கின்றோம். அதுவரையிலும், மோதல்கள், குண்டுவெடிப்புகள், தற்கொலைத் தாக்குதல்கள் நடைபெறும் மிகப்பயங்கரமான நாடென பலரும் அறிந்து வைத்திருந்தனர்.

கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கும், மந்தபோசனம் அதிகரித்திருக்கும், கடன் சுமையில் சிக்கித்தவிக்கும், சுற்றுலாவை தட்டிக்கழிக்கமுடியாத நாடென அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் இக்காலத்தில்தான், இலங்கையின் இரண்டு அணியினர், இலங்கையின் பிம்பத்தை வெளியுலகிற்கு படம்பிடித்துக் காண்பித்துள்ளார்.

சிங்கப்பூரில் இடம்பெற்ற ஆசிய வலைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை சம்பியனாகியுள்ளது. இப்போட்டியில் வழமை போன்று தர்ஜினி சிவலிங்கம் தனது திறமையை வெளிக்காட்டியிருந்தார். எனினும், தமிழ் ஊடகங்களைத் தவிர, ஏனைய ஊடகங்கள் அவரை அடக்கியே வாசித்தனர் என்பது வருந்தக்கூடியது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நடைபெற்ற ஆசிய கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில், பாகிஸ்தானை வீழ்த்தியே இலங்கை சம்பியனானது.

இலங்கை வலைப்பந்தாட்ட மகளிர் அணிக்கும், இலங்கை கிரிக்கெட் அணிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்டவர்கள் தங்களுடைய வாழ்த்துகளை பகர்ந்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். அதில், 'குழுவாக சேர்ந்து இயங்கினால்தான்' வெற்றியீட்டலாம் என்ற கருத்துப்பட கூறியிருக்கின்றனார். அவரது தலைமையின் போது, அமைச்சரவையில் கூட தங்களுடைய கருத்துகளை அவர் (கோட்டாபய) செவிமடுப்பதில்லை என, அன்றைய அமைச்சரவையில் இருந்த பலரும் பகிரங்கமாகவே விமர்சித்தனர்.

தற்போதைய அரசாங்கத்தில் இருக்கின்றவர்களும், ஏனைய எதிர்க்கட்சியினரும் 'குழுவாகச் சேர்ந்து இயங்குதல்' என்பது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும். ஆளும் கட்சியினராக இருந்தாலென்ன, எதிர்க்கட்சியினராக இருந்தாலென்ன, இது அரசியல் செய்யும் நேரமல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும். இல்லையேல் பொருளாதாரத்தில் இருந்து மீண்டெழ முடியாது.

இந்நிலையில், இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் எதிரான இறுதிப் போட்டியில், இந்திய அணியின் முன்னாள் வீரர் கௌதம் காம்பீர் செயற்பட்ட விதம் அருவருக்கச் செய்கின்றது. ஒருவேளை, இந்தியாவும் இலங்கையும் இறுதிப் போட்டியில் சந்தித்திருந்தால், அவருடைய நிலைப்பாடு, இலங்கைக்கு சார்பானதாக இருந்திருக்காது; இருக்கவும் முடியாது.

விளையாட்டை விளையாட்டாக எதிர்கொண்டு, வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை வீரர்களுக்கு அவசியம். கௌதம் காம்பீரின் செயற்பாடு ஒரு நாட்டுக்கு எதிரான வன்மத்தின் வெளிப்பாடாகும் என்பதையும் இவ்விடத்தில் ஞாபகமூட்டி, விளையாட்டில் மட்டுமல்ல எந்தவொரு விடயத்திலும் குழுவாக இயங்கினால் வெற்றி நிச்சயம் என்பதை, இலங்கையின் இவ்விரு அணிகளும் நிரூபித்துவிட்டன என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

வாய்வீச்சுகள் எந்த நேரத்திலும் சரிப்பட்டு வராது. இத்தகையவர்கள் பொதுவெளியில் அவமானப்பட்டுக் கொள்வார்கள். நேர்மையான வழியிலான முயலுகையும் உழைப்புமே உயர்த்தும்; இதுவே நிரந்தமானதும் ஆகும்.

தன்னைவிட எவரும் இல்லை என்பது, அறிவீனமும் திமிருமாகும். சரியான விடயங்களைப் பிழை என்றும் பிழையான கருமங்களை சரி என்றும் நியாயப்படுத்த முயலக்கூடாது. இவ்வாறு சொல்பவர்கள், செய்பவர்கள், மூர்க்க குணம் கொண்ட அநியாயவாதிகள். நியாய தர்மங்களை உணர்ந்தாலும், ஆணவம் இத்தகையவர்களை மறக்கடித்து விடுகின்றது.

வாழ்க்கையில் எது தேவை, எது தேவையற்றது என்பதை உணராமல், பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இத்தகையவர்கள், பல இழப்புகளைச் சந்திக்கிறார்கள். பொய்யும் புரட்டும் பித்தலாட்டமும் உயர்வுக்கு ஆகாது. இத்தகையவர்கள், பிறரை ஏமாற்றிப் பிழைப்பதற்கே முயலுவார்கள். இவர்களுக்கு, பிறரை ஏமாற்றுவது என்பது வேடிக்கையாக இருக்கும்.

தற்போது, காலம் மாறிவிட்டது. உலகஞானம், பேரறிவு உலகில் வியாபித்து விட்டது. சாதாரண குடும்பங்களிலும் உயர்பதவிகளை அநேகர் பெற்று வருகின்றார்கள். அத்துடன், வெளிநாடுகளிலும் சாதனை புரிந்து வருகின்றார்கள். யாவரையும் உயர்த்துவது கல்வியும் உழைப்பும் என்பதே உண்மையாகும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கண்டுகொள்ளப்படாத
# முஸ்லிம்கள் மீதான மீறல்கள்

மொஹமட் பாதுஷா

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ள நிலையில், மனித உரிமைகள் மீறல்கள் மீண்டும் பேசுபொருளாகி உள்ளன.

இம்முறை பேரவையின் அமர்வில், ஆணையாளர் மிச்செல் பச்லெட் வெளியிட்டுள்ள அறிக்கையில், நிலைமாறுகால நீதியை வலியுறுத்தி உள்ளார். அத்துடன், நாட்டில் நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கும் மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தவும், பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவித்தல், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்ளுதல், வடக்கு, கிழக்கில் இராணுவ பிரசன்னம் உள்ளிட்ட மேலும் பல விடயங்களையும் வலியுறுத்தி இருக்கின்றார்.

இது ஒன்றும் புதிதல்ல!

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரான 12 வருடங்களில், ஜெனீவா அமர்வும் மனித உரிமைகள் விவகாரங்களும் அடிக்கடி பேசப்படுகின்ற சங்கதிகள்தான். சர்வதேச சமூகம், குறிப்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை, இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், இலங்கை அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக 'பாடம்' போதித்து வருகின்றது. ஆயினும், ஐ.நா சொல்வதை எல்லாம், இலங்கை அரசாங்கங்கள் அப்படியே நடைமுறைப்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால், அமர்வுகள் மட்டும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பின்னணியில், இலங்கையில் இடம்பெற்றதாக சொல்லப்படுகின்ற எல்லா உரிமைகள் மீறல்களும் உண்மையில் இடம்பெற்றனவா? அதன் கனதி என்ன? என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. அத்துடன், அரச தரப்பு மட்டுமே மீறல்களைச் செய்ததாகக் கொள்ளவும் முடியாது.

இவர்கள் குறிப்பிடுகின்ற அளவுக்கு மீறல்கள் இடம்பெறவில்லை என்றும், புலம்பெயர் அமைப்புகளும் வெளிநாடுகளில் தஞ்சம் கோருவதற்காக உள்நாட்டுப் பிரச்சினையை பயன்படுத்துகின்ற ஆட்களும், இவ்விவகாரத்தை ஊதிப் பெருப்பிப்பதாக அரச தரப்பில் கூறப்படுகின்றது. ஆனால், மறுக்கவும் மறைக்கவும் முடியாதளவுக்கு சில சம்பவங்கள் நடந்தேறி இருக்கின்றன.

இந்த முன்னெடுப்புகளின் பெறுபேறும் விளைவும் எப்படி இருந்தாலும், தமிழ் மக்கள் தமது விவகாரத்தை, தங்கள் மீதான உரிமை மறுப்புகள், மீறல்கள் போன்றவற்றை சர்வதேசத்தின் அரங்குக்குக் கொண்டு சென்றுள்ளனர். அதற்காகத் தொடர்ந்தும் பாடுபட்டு வருகின்றனர் என்பது முக்கியமானது.

ஆனால், இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகம் எந்த இடத்தில் உள்ளது? இந்த நாட்டில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட உரிமை மீறல்கள், வன்முறைகள், படுகொலைகள், பயங்கரவாத வன்கொடுமைகள் போன்றவை, உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் சரியாக முன்வைக்கப்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு விடை தேட வேண்டியுள்ளது.

சுதந்திர இலங்கையில், உரிமை மீறல்களை அதிகம் எதிர்கொண்டவர்கள் தமிழர்கள் என்றாலும், தமிழ் சமூகத்தின் உரிமைகள் மட்டுமே மீறப்பட்டதாகச் சொல்ல முடியாது. சிங்கள மக்களினதும் முஸ்லிம் சமூகத்தினதும் உரிமைகளும் கணிசமான அளவுக்கு மீறப்பட்டுள்ளன.

அரந்தலாவையில் படுகொலை செய்யப்பட்டவர்களும் காத்தான்குடியில் கொலை செய்யப்பட்டவர்களும் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களும் வேறு வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்; இக்கொலைகளின் தன்மைகள் வேறுபடலாம். ஆனால், எல்லாம் ஒரே வகையான அநியாயங்களே என்பதை யாரும் மறுக்கவியலாது.

அதேபோல், அரச தரப்பில் அதிகமாக உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதாக தமிழ்த் தேசியம் கூறி வருகின்றது. அதற்கான ஆதாரங்களையும் அவர் தயார்செய்து முன்வைப்பதை காண முடிகின்றது. ஆனால், விடுதலைப் புலிகள் உள்ளிட்ட ஆயுத இயக்கங்கள் தொடக்கம், சஹ்ரான் கும்பல் போன்ற பயங்கரவாத அமைப்புகள் தொட்டு, பல இனவாத அமைப்புகள் வரை பல தரப்பினரும் உரிமை மீறல்களை நிகழ்த்தி இருக்கின்றனர் என்பதே நிதர்சனமானது.

அந்த வகையில், தமிழ் மக்கள் மீதான உரிமைகள் மீறல்களை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள், தொடர்ச்சியாக வெளியுலகுக்குச் சொல்லி வருகின்றன. புலம்பெயர் அமைப்புகளும் இவ்விடயத்தில் சர்வதேச சமூகத்துக்கு அழுத்தம் கொடுக்கின்றன.

பெரும்பான்மை சமூகத்தின் விவகாரங்களை, ஆட்சியாளர்கள் கவனிக்கின்றார்கள். கத்தோலிக்க சமூகத்துக்கு நியாயம் தேடும் முன்முயலுகைகளை பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்னின்று மேற்கொள்கின்றார்.

ஆனால், முஸ்லிம் சமூகத்தின் மீது நிகழ்த்தப்பட்ட அநியாயங்கள், படுகொலைகள், இனச்சுத்திகரிப்பு, உரிமை மீறல்கள் போன்றவை, பெரியளவில்கூட இன்னும் ஆவணப்படுத்தப்படவும் இல்லை. ஒரு முக்கிய விவகாரமாக, பேசுபொருளாக முன்னிலைப்படுத்தவும் இல்லை.

முஸ்லிம்கள் மீதான உரிமைகள் மீறல்கள் பற்றிப் பேசுவது என்றால், நூறு வருடங்கள் பின்னோக்கி நோக்க வேண்டும். அதைவிடுத்து, சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியை மட்டும் நோக்கினால், 1970களில், 1980களில் இடம்பெற்ற கலவரங்களால், முஸ்லிம்கள் இனரீதியான ஒடுக்குமுறையை எதிர்கொண்டதைக் கவனிக்க வேண்டும்.

அதன் பின்னர், விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழ் ஆயுத இயக்கங்களாலும் படையினராலும் அவ்வப்போது உரிமைகள் மீறல்களை எதிர்கொண்டனர். இந்திய அமைதி காக்கும் படைக்கும் இதில் சிறுபங்குள்ளது.

குறிப்பாக, வடக்கில் பூர்வீகமாக வாழ்ந்த சுமார் ஒரு இலட்சம் முஸ்லிம்கள் 1990ஆம் ஆண்டு இரவோடிரவாக யாழ்ப்பாணத்திலும் அதைச் சூழவுள்ள இடங்களில் இருந்தும் விடுதலை புலிகளால் வெளியேற்றப்பட்டனர். ஆனால், விடுதலைப் புலிகள் இதை 'ஒரு கசப்பான சம்பவம்' என்று கூறியதோடு, தமது பிராயச்சித்தத்தை முடித்துக் கொண்டனர்.

இதே காலப்பகுதியில், காத்தான்குடி, ஏறாவூர் பிரதேசங்களில் பள்ளிவாசல்களில் தொழுது கொண்டிருந்த முஸ்லிம்கள், புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர். அதேபோன்று குருக்கள்மடம், அக்கரைப்பற்று, அளிஞ்சிப்பொத்தானை, உறுகாமம் என கிழக்கில் பல இடங்களில், முஸ்லிம்களை நோக்கி ஆயுதங்கள், பலத்த குரலில் இரத்தம் சிந்தப் பேசியிருந்தன.

முஸ்லிம்கள், தமிழர்களோடு இணைந்து அரசியல் செய்து வந்த நிலையில், தனியான அரசியல் கட்சியை தொடங்கியிருந்த காலமது. ஆயினும், தொடர்ந்து பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள், தமிழ் இயக்கங்களுடன் இணைந்து போராடிக் கொண்டிருந்தனர். இந்தப் பின்னணியிலேயே, இந்தப் படுகொலைகள், விரட்டியடிப்புகள், கப்பம் பறிப்புகளும் இடம்பெற்றன. எனவே, இந்த உரிமை மீறல்கள் உலகுக்கு சரிவரத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

ஆயுதக் கலாசாரம் அல்லது பயங்கரவாத அமைப்புகளுக்கு மேலதிகமாக, இனவாத, கடும்போக்குவாத சிங்கள அமைப்புகளால் முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் உரிமைசார் நெருக்கடியை சந்தித்து வருகின்றது.

கடந்த பத்து வருடங்களில் மாத்திரம், அளுத்கம வன்முறை, திகன கலவரம், அம்பாறை வன்முறை, வடமேல் மாகாண வன்முறைகள் என ஏகப்பட்ட அத்துமீறல்கள், ஒடுக்குமுறைகளை முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ளனர். இவை தவிர, இஸ்லாமிய சமயத்தை மையமாகக் கொண்ட கருத்தியல் ரீதியான ஒடுக்குமுறைகளும் இடம்பெற்று வருகின்றன.

தமிழர்கள் தங்களது உரிமைகள் மீறல்களை பேசிய அளவுக்கு, அரசாங்கங்கள் தம்பக்க நியாயங்களை முன்வைத்த அளவுக்கு, முஸ்லிம் சமூகமும் தம்மீதான உரிமைகள் மீறல்களைப் பேசியிருக்க வேண்டும். ஆனால், ஓரிரு அரசியல்வாதிகள் மாத்திரம், ஆவணங்களை சமர்ப்பித்தனரே தவிர, மற்றைய 99 சதவீதமானோரும் இதைக் கண்டு கொள்ளவில்லை.

இந்த முறை, முஜிபுர் ரஹ்மான் எம்.பி, ஜெனீவா செல்லவுள்ளதாக கூறப்படுகின்றது. அது நல்ல விடயமே! ஆனால், இதை முஸ்லிம் கட்சித் தலைவர்கள், ஆயுதக் கலாசாரத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் எப்போதோ செய்திருக்க வேண்டும்.

இதனது நோக்கம், அரசாங்கத்தை தர்மசங்கடத்துக்கு உள்ளாக்குவதோ, சர்வதேசம்தான் நமக்கு நீதியைத் தரமுடியும் என்பதோ அல்ல; அல்லது, தமிழர்களின் நகர்வுகளை பலவீனப்படுத்துவதோ அல்ல.

மாறாக, இந்த நாட்டில் முஸ்லிம் சமூகமும் உரிமைகள் மீறல்களை எதிர்கொண்டுள்ளது என்பதை, உலகுக்குத் தெளிவாக எடுத்துரைப்பதும் சர்வதேச அரங்கில் பதிவு செய்வதும் ஆகும். இது மிக முக்கியமானது.

ஆயினும், அமைச்சுப் பதவிகளுக்காக, பணம் உழைக்கக் கூடிய வாய்ப்புகளுக்காக ஆலாய்ப் பறக்கின்ற கடந்தகால மற்றும் தற்கால முஸ்லிம் அரசியல் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்பணியை இன்றுவரை சரிவரச் செய்யவில்லை.

ஆகவே, இந்தப் பின்னணியில் முஸ்லிம்கள் மீது, பலதரப்பாலும் உரிமைகள் மீறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை, சர்வதேச சமூகமும் ஒரு பெரிய விவகாரமாக நோக்குவதற்கான நிர்ப்பந்தமும் கடப்பாடும் இல்லாது போயுள்ளது.

## கடிதங்கள்

### போதைப்பொருள் விற்பனையையும் பாவனையையும்
# கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்

கிளிநொச்சி, பாரதிபுரம், இரணைமடுச் சந்தி போன்ற பகுதிகளில் கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் விற்பனையும் பாவனையும் அதிகரித்துக் காணப்படுவதாகவும், இத்தகைய குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால், இப்பகுதியில் இளைஞர்கள் கஞ்சா நுகர்வுக்கு அடிமையாகி காணப்படுவதுடன், பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடவும் தூண்டப்பட்டு வருகின்றனர். எனவே, இவற்றைத் தடுப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், போதைப்பொருள், கஞ்சா போன்ற குற்றச்சாட்டுகள் காரணமாக, கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டவர்களில் அதிகளவானோர் பாரதிபுரம், இரணைமடு சந்தி, சாந்தபுரம் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

தற்போது பாரதிபுரம், சாந்தபுரம் ஆகிய பகுதிகளில் அதிகரித்துக் காணப்படும் இக்குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என, இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுப்பிரமணியம் பாஸ்கரன்

# 3 கி.மீ ஓடிச் சென்று அறுவை சிகிச்சை

பெங்களூருவில் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்ட மருத்துவர், காரில் இருந்து கீழே இறங்கி ஓடி மருத்துவமனைக்குச் சென்று அறுவை சிகிச்சை செய்த நெகிழ்ச்சி சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கர்நாடகா மாநிலம் பெங்களூருவைச் சேர்ந்த குடல் அறுவை சிகிச்சை மருத்துவர் . இவர் சர்ஜாபூரில் உள்ள மணிப்பால் மருத்துவமனையில், கடந்த ஒகஸ்ட் 30ஆம் திகதி ஒரு நோயாளிக்கு அவசர அறுவை சிகிச்சை செய்ய திகதி கொடுத்துள்ளார்.





இந்நிலையில்,கடந்த இரு வாரங்களாக பெங்களூருவில் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக நீர் தேங்கி அங்கு டிராபிக் கடுமையாக இருந்து. சம்பவ தினமான ஒகஸ்ட் 30ஆம் திகதி அன்றும் காலை மருத்துவர் வீட்டில் இருந்து காரில் கிளம்பி மருத்துவமனைக்கு விரைந்துள்ளார்.

ஆனால், போக்குவரத்து காரணமாக அவர் மருத்துவமனைக்குச் செல்ல தாமதம் ஆகியுள்ளது. அறுவை சிகிச்சைக்கான நேரம் நெருங்கிய நிலையில், போக்குவரத்து நெரிசல் சரியாவதாக தெரியவில்லை. எனவே, சற்றும் யோசிக்காமல் காரை சாரதியிடம் கொடுத்துவிட்டு இறங்கி மருத்துவமனையை நோக்கி ஓட ஆரம்பித்துள்ளார். சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் மருத்துவமனைக்கு ஓடிச் சென்று மருத்துவமனையை அடைந்துள்ளார். பின்னர் குறித்த நேரத்தில் அறுவை சிகிச்சையும் மேற்கொண்டுள்ளார்.

சென்னை

## குடிபோதையில் 30 பெண்கள் ஆபாச நடனம்

குடிபோதையில் ஆபாச நடனம் ஆடிய, பெண்கள் 30 பேர் பொலிஸாரால் மீட்கப்பட்டு, எச்சரிக்கை செய்து விடுதலை செய்யப்பட்ட சம்பவம் சென்னையில் இடம்பெற்றுள்ளது.

சென்னையில் இரவு 10 மணிக்கு மேல் பார்களில் மது விருந்து நடத்தக்கூடாது என்ற கட்டுப்பாடு உள்ளது. மேலும் ஹோட்டல்கள், பார்களில் நடன நிகழ்ச்சி நடத்தவும் தடை உள்ளது.

ஆனால் சென்னையில் பல இடங்களில் பார் வசதியுடன் கூடிய தனியார் விடுதிகளில் தடையை மீறி நள்ளிரவு மது விருந்து மற்றும் அரைகுறை ஆடையுடன் நடன நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

சென்னை அண்ணா சாலையை ஒட்டியுள்ள ராயப்பேட்டை ஜெனரல் பேட்டர்ஸ் சாலையில் பார் வசதிகளுடன் கூடிய தனியார் விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த விடுதியில் நள்ளிரவில் மது விருந்துகளுடன் பெண்கள் ஆபாச நடனம் மற்றும் குத்தாட்டம் போடுவதாக அண்ணாசாலை பொலிஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து பொலிஸார் அந்த விடுதியில் அதிரடி சோதனை நடத்தினார்கள். அங்கு 30க்கும் மேற்பட்ட இளம்பெண்கள் தங்களின் ஆண் நண்பர்களுடன் நடனமாடிக்கொண்டு இருந்தனர். குடிபோதை தலைக்கேறி மதுமயக்கத்தில் இருந்த அந்த இளம்பெண்கள் அங்கு இசைக்கப்பட்ட இசைக்கு ஏற்ப அரைகுறை ஆடையுடன் ஆபாசமாக நடனமாடி குத்தாட்டம் போட்டனர்.

## ஜூஸ் வாளியில் விழுந்து குழந்தை மரணம்

புதுவை கோரிமேடு அருகே உள்ள ஆலங்குப்பம் அன்னை நகரை சேர்ந்தவர், ஜூஸ் தயாரித்து அதனை பாக்கெட்டில் அடைத்து விற்பனை செய்து வருகிறார்.



வழக்கம்போல் ஜூஸ் தயாரித்து, அதனை பிளாஸ்டிக் வாளியில் மூடாமல் வைத்து விட்டு சமையல் வேலையில் ஈடுபட்டார். அப்போது 2 வயதான குழந்தை அந்த பகுதியில் விளையாடிக்கொண்டு இருந்தது. சிறிது நேரத்தில் குழந்தையை காணவில்லை.

குழந்தையை தாய் தேடியபோது அக்குழந்தை ஜூஸ் வாளிக்குள் தலைக்குப்புற விழுந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதனால் பதறிப் போய், குழந்தையை தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு சென்றார். அங்கு குழந்தையை பரிசோதனை செய்த டாக்டர்கள் குழந்தை ஏற்கெனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

மகாராஷ்டிரா

## சுயஇன்பத்தில் ஈடுபட்ட 60 வயது நபருக்கு சிறை

மகாராஷ்டிரா மாநிலத்தில் சுய இன்பத்தில் ஈடுபட்ட 60 வயது நபருக்கு ஓராண்டு சிறை தண்டனை வழங்கப்பட்டது. மகாராஷ்டிரா மாநிலத்தில் 4 வயது சிறுவன் தனது வீட்டின் அருகே உள்ள தையல் கடைக்கு சென்றுள்ளான். அப்போது 60 வயது நபர் தனக்கு சொந்தமான தையல் கடையில் சுய இன்பத்தில் ஈடுபட்டுள்ளார். மேலும் அச்சிறுவனிடன் தனது அந்தரங்க உறுப்பையும் அந்த நபர் காட்டியிருக்கிறார். 60 வயது நபரின் பாதக செயலை அச்சிறுவன் பார்த்து அதிர்ந்துள்ளான்.

அதனை பார்த்து அதிர்ச்சி அடைத்த சிறுவன், வீட்டிற்கு சென்று தனது பெற்றோரிடம் இது தொடர்பாக தெரிவித்துள்ளான். இதையடுத்து சிறுவனின் குடும்பத்தார் காவல்துறையில் புகார் அளித்த நிலையில், அந்த நபர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதியப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி மற்றவர் பார்வைக்கு படும்படியாக பொது வெளியில் சுய இன்பத்தில் ஈடுபடுவது பாலியல் குற்றம் என்று தீர்ப்பளித்துள்ளார்.

காவேரிப்பட்டணம்

## காப்பாற்ற முயன்றவரை இறுக்கிக் கொன்ற பாம்பு

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் அருகே கல்குட்டபட்டியை அடுத்த மேல்கொட்டாயை சேர்ந்தவர் சின்னசாமி. இவர் விவசாயம் செய்து வருகிறார்.

இந்நிலையில் இவருடைய 50 அடி ஆழ கிணற்றில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்பு மலைப்பாம்பு விழுந்ததை பார்த்துள்ளார். அந்த மலைப்பாம்பை கிணற்றிலிருந்து வெளியே எடுப்பதற்காக நடராஜ் என்பவர் முன்வந்து கிணற்றில் இறங்கியுள்ளார்.

மலைப்பாம்பை கிணற்றின் பாதி வரை தூக்கி வந்த பின்பு எடை தாங்காமல் மலைப்பாம்பும் அவரும் கிணற்றில் விழுந்துள்ளனர். அப்பொழுது அவரை மலைப்பாம்பு இறுக்கி பிடித்துள்ளது.

அவர் கூச்சலிடவே அருகில் இருப்பவர்கள் கிருஷ்ணகிரி தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். விரைந்து வந்த தீயணைப்பு நிலைய அலுவலர் வெங்கடாசலம் தலைமையில் தீயணைப்பு படையினர் நீண்ட நேரம் நடராஜனை மீட்க போராடினர். ஆனால் மலைபாம்பு அவரை இறுக்கியதில் நடராஜ் உயிரிழந்தார். பின்னர் அவரது உடலை தீயணைப்புத்துறையினர் மீட்டனர்.



## தமிழ்நாட்டுப் பெண்ணை திருமணம் செய்துகொள்ளுங்கள்

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கன்னியாக்குமரியில் இருந்து நடைப்பயணத்தை மேற்கொண்டுள்ளார். இந்த நிலையில் மார்த்தாண்டம் பகுதியில் வேலை செய்யும் பெண்களுடன் கலந்துரையாடினார். அப்போது அவர்கள் ராகுல் காந்தியைத் தமிழ்நாட்டுப் பெண்ணை திருமணம் செய்துகொள்ளுமாறு சொன்னதை ராகுல் காந்தி வியப்புடன் எதிர்கொண்டுள்ளார்.



மார்த்தாண்டம் பகுதியில் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்யும் பெண்களுடன் கலந்துரையாடும் போது அவர்கள் ராகுல் காந்திக்குத் தமிழ்நாடு என்றால் பிடிக்கும், தமிழ்நாட்டுப் பெண்ணை திருமணம் செய்துகொள்ளுங்கள் என்று கல்யாணம் பேச்சை எடுத்துள்ளனர்.

அந்த கேள்விகளுக்கு வெட்கத்துடன் ராகுல் காந்தி எதிர்கொண்ட தருணத்தைக் காங்கிரஸ் எம்.பி ஜெய்ராம் ரமேஷ் டிவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில் அவர் ராகுல் காந்தி பெண்களுடன் கலந்துரையாடும் நிகழ்வையும் அதன் பின்னர் ராகுல் காந்தியின் சிரிப்பையும் புகைப்படமாகப் பதிவிட்டுள்ளார். மேலும் ராகுல் காந்தியின் வியப்பு புகைப்படத்தில் தெரிகிறது என்று குறிப்பிட்டுள்ளார். இது யாத்திரையில் நடத்த சிரிப்பான தருணம் என்று பதிவிடப்பட்டுள்ளது.



## மனந்திறந்தார் திஷா பதானி

இந்திய திரை உலகில் மாஸ் ஹீரோவாக திகழ்ந்து கொண்டிருப்பவர் சூர்யா. இவர் தற்பொழுது வணங்கான், வாடிவாசல் போன்ற படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். இப்படங்களைத் தொடர்ந்து சூர்யா இயக்குநர் சிறுத்தை சிவா இயக்க இருக்கும் "சூர்யா 42" என்ற திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார்.

தற்பொழுது சூர்யா 42 என்று தற்காலிகமாக பெயர் வைத்துள்ள இப்படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடிகை திஷா பதானி நடிக்க, ஆனந்த்ராஜ், கோவை சரளா, கிங்ஸ்லி, யோகி பாபு ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர்.

தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்க இருக்கும் இப்படத்தின் பூஜை சமீபத்தில் நடந்து முடிந்து தற்பொழுது படப்பிடிப்பு தொடங்கியுள்ளது.

இந்நிலையில் இப்படத்தில் நடிப்பதை பற்றி முதல்முறையாக நடிகை திஷா பதானி மனந்திறந்துள்ளார். அதில் அவர், சூர்யா மற்றும் சிவாவுடன் இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சி. இதில் என் கேரக்டர் தனித்துவமானது. இதுவரை நடித்திராத புதுமையான பாத்திரத்தை பார்வையாளர்களுக்கு கொண்டு வருவதில் ஆர்வமாக இருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.







## மனைவிக்காக...

தமிழ் சினிமாவின் பிரபல இயக்குநர்களின் ஒருவராக வலம் வருபவர் விக்னேஷ் சிவன். இவரது இயக்கத்தில் இறுதியாக வெளியான காத்து வாக்குல ரெண்டு காதல் திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

இந்த படத்தை தொடர்ந்து அஜித் நடிக்கும் அவரது 62ஆவது படத்தை இயக்க இருக்கிறார். இதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.

இந்த நிலையில் விக்னேஷ் சிவன் முதல் முறையாக தனது மனைவி நயன்தாராவுக்காக விளம்பரம் ஒன்றை இயக்கி உள்ளார். இது குறித்த புகைப்படத்தை தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரில் பதிவு செய்து ஒன்லி ஃபார் நயன்தாரா என தெரிவித்துள்ளார்.



## ரஜினி – ஷாருக்கான் சந்திந்து பேச்சு

பாலிவுட் திரையுலகில் உச்ச நட்சத்திரமாக ஜொலித்து கொண்டிருப்பவர் ஷாருக்கான். இவர் தற்பொழுது இயக்குநர் அட்லி இயக்கத்தில் உருவாகும் 'ஜவான்' திரைப்படத்தில் தீவிரமாக நடித்துக் கொண்டிருக்கிறார்.

இதில் கதாநாயகியாக நடிகை நயன்தாரா நடிக்க விஜய் சேதுபதி வில்லனாக நடித்து வருகிறார்.

இப்படத்தில் இரட்டை வேடங்களில் நடித்து வரும் ஷாருக்கான் படப்பிடிப்புக்காக சென்னை வந்துள்ளார். படப்பிடிப்பு சென்னையில் உள்ள பிரபல ஸ்டுடியோவில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் இதே ஸ்டுடியோவில் நடிகர் ரஜினியின் 'ஜெயிலர்' திரைபடத்தின் படப்பிடிப்பும் நடைபெற்று வருகிறது. அதனால் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தை பாலிவுட் நடிகர் ஷாருக்கான் திடீரென்று நேரில் சந்தித்து பேசி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த சந்திப்பிற்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை.

## ரெஜினாவின் "ஜோக்"

தென்னிந்திய திரை உலகில் பிரபல நடிகைகளில் ஒருவராக திகழ்பவர் நடிகை ரெஜினா. இவர் தமிழில் கேடி பில்லா கில்லாடி ரங்கா என்ற திரைப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடித்து அறிமுகமானார்.

இந்தநிலையில் நடிகை ரெஜினா மற்றும் நிவேதா தாமஸ் இருவரும் இணைந்து தெலுங்கில் ஒரு ஊடகத்திற்கு பேட்டி ஒன்று அளித்துள்ளனர்.

அப்பொழுது சாப்பிட்டுக் கொண்டே பேட்டி அளித்து வந்த ரெஜினா ஜோக் ஒன்றை கூறியுள்ளார். அந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

அதில் அவர், ஆண்களும் சரி மேகியும் சரி 2 நிமிடங்கள் தான் எனக் கூறியுள்ளார். அதனைக் கேட்டு பேட்டியாளரும் நிவேதா தாமஸும் சிரித்துள்ளனர்.



## சௌந்தர்யாவின் அறிவிப்பு





சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் இரண்டாவது மகளான சௌந்தர்யா ரஜினிகாந்த் அண்மையில் கர்ப்பமான நிலையில் அவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் மகளும் இயக்குனருமான சௌந்தர்யா ரஜினிகாந்த் தொழிலதிபரும் நடிகருமான விசாகன் வணங்காமுடி என்பவரை கடந்த 2019ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்இ ந்த நிலையில் அண்மையில் அவர் கர்ப்பமான நிலையில் அவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. இதனை தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்துள்ள சௌந்தர்யா ரஜினிகாந்த் குழந்தையின் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளார்.



சீனா

# 500 மாணவர்களை தனிமைப்படுத்திய சீனா

சீனா, 'சீரோ கொவிட் கொள்கை'யை (கொரோனா தொற்று இல்லாத நாடு) பின்பற்றி வருவதால் பல நகரங்களில் கட்டுப்பாடுகள், பொதுமுடக்கம் போன்றவற்றை தீவிரமாக அமல்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் பல்கலைக் கழகமொன்றைச் சேர்ந்த கொரோனாத் தொற்றுக்குள்ளான சுமார் 500 மாணவர்கள், 19 ஆசிரியர்கள் மற்றும் 5 உதவியாளர்களை சீன அரசு தனிமைப்படுத்தப்படுதல் மையத்துக்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வார நிலைவரப்படி அந்த நாட்டில் 6 கோடி மக்கள் பொதுமுடக்கத்தில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் நேற்று முன்தினம் மாத்திரம் (11)அங்கு 1,248 பேருக்கு தொற்று பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரேஸிலில்

# இரட்டையர்களுக்கு இருவேறு தந்தைகள்

பிரேஸிலின் மினெரியோஸ் பகுதியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர், சமீபத்தில் இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார்.
எனினும் இக்குழந்தைகளின் தந்தை, இரண்டு பேர் என்பது வைத்தியர்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.
முன்னதாக அப்பெண் ஒரே நாளில் இரண்டு நபர்களுடன் உறவில் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கும் நிலையில், அதில் தந்தை யார் என்பதில் அந்த பெண்ணுக்கும் சந்தேகம் இருந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் தன்னுடைய சந்தேகத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஒரே ஒரு தந்தை வழி சோதனையை அவர் மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அப்படி அவர் DNA பரிசோதனை எடுத்து பார்த்ததில், சம்பந்தப்பட்ட அந்த நபர் ஒரு குழந்தைக்கு மட்டும் தான் தந்தை என்பது நிரூபணம் ஆகி உள்ளது. அந்தப் பெண் இதனை அறிந்து திகைத்துப் போகவே, இன்னொரு நபர், மற்றொரு குழந்தையின் தந்தை என்பதும் தெரியவந்துள்ளது.

இதில் ஆச்சரியப்பட கூடிய விடயம் என்னவென்றால், இரு ஆண்கள் மூலம் அந்த பெண் கருவுற்றிருந்தாலும் இரண்டு குழந்தைகளின் உருவ ஒற்றுமையில் பெரிய மாற்றங்கள் எதுவும் இல்லை என்பது தான் மருத்துவர்களையும் திக்கு முக்காட வைத்துள்ளது.

இது பற்றி பேசும் மருத்துவர்கள், இந்நிகழ்வு மிகவும் அரிதானதாக இருந்தாலும் முற்றிலும் சாத்தியம் இல்லை என்றும் கிடையாது என தெரிவித்துள்ளனர். அறிவியல் ரீதியாக இந்த முறை *Heteroparental Superfecundation* என அழைக்கப்படுகிறது. ஒரே தாயிடம் இருந்து இரண்டு முட்டைகள் வெவ்வேறு ஆண்களால் கருத்தரிக்கப்படும்போது இந்த நிகழ்வு சாத்தியமாகின்றது என்றும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மில்லியனில் ஒருவருக்கு தான் இது போன்று நடக்கும் என்றும் மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். இந்த *Heteroparental Superfecundation* தன்மை கொண்ட குழந்தைகள், மொத்தம் உலக அளவில் 20 பேர் வரை இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்கொட்லாந்து

## ராணி எலிசபெத்தின் மரணத்தை கொண்டாடிய

# நபர் மீது தாக்குதல்




பிரித்தானியாவின் ராணி 2ஆம் எலிசபெத் கடந்த 8ஆம் திகதி தனது 96வது வயதில் ஸ்கொட்லாந்தில் உள்ள பண்ணை மாளிகையில் உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்தார்.

ராணியின் மரணத்தையடுத்து உலகின் பல நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். அதேவேளை, இங்கிலாந்தில் 10 நாள் துக்கம் அனுசரிக்கப்படுகிறது.

இந்நிலையில், பிரித்தானியாவுக்கு அருகேயுள்ள ஸ்கொட்லாந்தில் ஈஸ்டர் ரோஸ் பகுதியில் வசித்து வரும் ஜகி பிக்கெட் என்ற பெண், ராணியின் மறைவை மது அருந்தியவாறு கொண்டாடியுள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் சமூக வலைத்தளங்களில் வைரலானதைத் தொடர்ந்து குறித்த பெண்ணுக்குச் சொந்தமான உணவகத்தின் மீது மக்கள் தாக்குதல் நடத்தியுள்ளதோடு, அவரது கார் மீது கற்களை வீசியும், அவருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, பாதுகாப்பு நலன் கருதி குறித்த உணவகத்தை மூடும்படி ஜகியிடம் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர் எனவும், அப் பெண் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டுபாய்

# டுபாயில் பிரம்மாண்ட நிலா

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் நிலவின் தோற்றத்தில் மிகப் பிரம்மாண்டமான சொகுசு விடுதியொன்றினை அமைக்க டுபாய் அரசு தீர்மானித்துள்ளது.

கனடாவின் மூன் ஓல்டு ரிசார்ட்ஸ் என்னும் நிறுவனமானது, இந்தக் கட்டடத்தின் கட்டுமான பணிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், இன்னும் இரண்டு ஆண்டுகளில் இவ்விடுதி, கட்டி முடிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் கட்டப்படவுள்ள இச்சொகுசு விடுதியின் உயரம் சுமார் 735 அடி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்விடுதியில் 300 ஸ்கை வில்லா குடியிருப்புகள், அறைகள், வெல்னஸ் சென்டர், இரவு விடுதிகள் போன்றவை இருக்கும் எனவும், இதனால் சுமார் 1.8 பில்லியன் டொலர் வருமானம் கிடைக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

# இராணிக்கு பிடித்த உணவு

## இரகசியத்தை உடைத்த அரண்மனை



பிரித்தானியாவின் மகாராணி இரண்டாம் எலிசபெத் உடல் நலக் குறைவு காரணமாக கடந்த 8 ஆம் திகதி காலமானார்.

தனது 25ஆவது வயதில் இராணியாக பதவியேற்ற எலிசபெத் மகாராணி சுமார் 70 ஆண்டுகாலம் இராணியாக பதவி வகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவரது உணவுப் பழக்கவழக்கம் குறித்த பல விடயங்களை அரண்மனை ஊழியர்கள் அண்மையில் பகர்ந்துள்ளனர்.

இராணி எலிசபெத், பாண் மற்றும் ஜாம் உள்ளிட்ட உணவையே அதிகம் உண்பார் எனவும், குறிப்பாக பாரம்பரிய பிரெஞ்ச் மற்றும் பிரிட்டிஷ் உணவுகளை விரும்பி உண்பார் எனவும் பெரும்பாலும் அரண்மனையின் தோட்டங்களில் விளைவும் காய்கறிகளையும், அவருக்கென்று தனியாக ஆற்றில் வளர்க்கப்படும் சால்மன் மீன்களையே உண்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, யோகட், செரல் (அ) மல்டிகிரெய்ன் டோஸ்ட், சிறப்பு நாள்களாக இருந்தால் ஸ்கிராம்பல்டு எக் மற்றும் ஸ்மோக்டு சால்மன் மீன் ஆகியவற்றை இராணி உட்கொள்வார் எனவும், எனினும் ஒட்டகம், முயல் உள்ளிட்ட சில இறைச்சி வகைகளை ராணி உண்டதே இல்லை எனவும் கூறப்படுகிறது.

## ஆசியக் கிண்ணம்:

# சம்பியனானது இலங்கை



ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கை சம்பியனானது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தியே இலங்கை சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, முதலாவது ஓவரிலேயே குசல் மென்டிஸை நசீம் ஷாவிடம் இழந்ததுடன், பதும் நிஸங்கவையும் விரைவிலேயே ஹரிஸ் றாஃப்பிடம் பறிகொடுத்தது. தொடர்ந்து வந்த தனுஷ்க குணதிலகவும் விரைவிலேயே றாஃப்பிடம் வீழ்ந்ததுடன், 28 (21) ஓட்டங்களுடன் இஃப்திஹார் அஹ்மட்டிடம் தனஞ்சய டி சில்வாவும் சிறிது நேரத்திலேயே வீழ்ந்தார். அணித்தலைவர் தசுன் ஷானகவும் வந்த வேகத்திலேயே ஷடாப் கானிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

பின்னர் விரைவாக ஓட்டங்களைப் பெற்ற வனிடு ஹஸரங்க 36 (21) ஓட்டங்களைப் பெற்ற நிலையில் றாஃப்பிடம் வீழ்ந்த நிலையில், பானுக ராஜபக்ஷவின் ஆட்டமிழக்காத 71 (45), சாமிக கருணாரத்னவின் ஆட்டமிழக்காத 14 (14) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 171 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், ஆரம்பத்திலேயே அஸாம், பக்கர் ஸமனை பிரமோத் மதுஷனிடம் பறிகொடுத்தது.

இதைத் தொடர்ந்து மொஹமட் றிஸ்வானும், அஹ்மட்டும் இனிங்ஃப்ஸை நகர்த்திய நிலையில் மதுஷனிடம் 32 (31) ஓட்டங்களுடன் அஹ்மட் வீழ்ந்தார். இரண்டு ஓவர்களிலேயே மொஹமட் நவாஸும், றிஸ்வானும் அடுத்தடுத்த ஓவர்களில் சாமிக கருணாரத்ன, ஹஸரங்கவிடம் வீழ்ந்தனர். றிஸ்வான் 55 (49) ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

ஹஸரங்கவின் இதே ஈவரிலேயே ஆசிப் அலி, குஷ்டில் ஷாவும் ஆட்டமிழந்த நிலையில், அடுத்த ஓவரில் ஷடாப் வீழ்ந்ததோடு, அதற்கடுத்த ஓவரில் மதுஷனிடம் ஷா விழுந்ததோடு, இனிங்ஸின் இறுதிப் பந்தில் கருணாரத்னவ்விடம் றாஃப் விழ 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 147 ஓட்டங்களையே பெற்ற பாகிஸ்தான் 23 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ராஜபக்ஷவும், தொடரின் நாயகனாக ஹஸரங்கவும் தெரிவாகினர்.

இத்துடன் ஆசியக் கிண்ணத் தொடரில் ஆறாவது தடவையாக இலங்கை சம்பியனாகியுள்ளது.

## தென்னாபிரிக்காவுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய இங்கிலாந்து

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இங்கிலாந்து கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை தென்னாபிரிக்காவும், இரண்டாவது போட்டியை இங்கிலாந்தும் வென்றிருந்த நிலையில், ஓவலில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த மூன்றாவது டெஸ்டை இங்கிலாந்து வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என அவ்வணி தொடரைக் கைப்பற்றியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

தென்னாபிரிக்கா: 118/10 (துடுப்பாட்டம்: மார்கோ ஜன்சன் 30 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஒலி றொபின்ஸன் 5/49, ஸ்டூவர்ட் ப்ரோட் 4/41, ஜேம்ஸ் அன்டர்சன் 1/16)

இங்கிலாந்து: 158/10 (துடுப்பாட்டம்: ஒலி போப் 67 ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்கோ ஜன்சன் 5/35, ககிஸோ றபாடா 4/81, அன்றிச் நொர்ட்ஜே 1/29)

தென்னாபிரிக்கா: 169/10 (துடுப்பாட்டம்: டீன் எல்கர் 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் ஸ்டோக்ஸ் 3/39, ஸ்டூவர்ட் ப்ரோட் 3/45, ஜேம்ஸ் அன்டர்சன் 2/37, ஒலி றொபின்ஸன் 2/40)

இங்கிலாந்து: 130/1 (துடுப்பாட்டம்: ஸக் குறொலி ஆ.இ 69, அலெக்ஸ் லீஸ் 39 ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 1/57)





## ஐ. அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர்:

# சம்பியனான அல்கரஸ்

ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் தற்போதைய உலகின் முதல்நிலை வீரரான கார்லோஸ் அல்கரஸ் சம்பியனானார்.

நேற்று அதிகாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் தற்போதைய இரண்டாம் நிலை வீரரான கஸ்பர் றூட்டை எதிர்கொண்ட ஸ்பெய்னின் அல்கரஸ், 6-4, 2-6, 7-6 (7-1), 6-3 என்ற செட் கணக்கில் வென்றே சம்பியனாகியிருந்தார்.

அந்தவகையில் 19 வயதான அல்கரஸ், வரலாற்றில் தரவரிசையில் முதலாமிடத்துக்கு வந்த மிகவும் இளவயது வீரர் என்ற பெயரை தனதாக்கிக் கொண்டிருந்தார். இத்தொடர் ஆரம்பிப்பதற்கு முன்பாக நான்காமிடத்தில் காணப்பட்டு தற்போது தொடர் முடிவில் நான்கு இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை அடைந்துள்ளார்.

## தேசிய மட்ட ஜூடோ போட்டிக்கு மட்டக்களப்பில் இருந்து

# 12 வீர, வீராங்கனைகள்

**எம்.எஸ். எம்.நூர்தீன்**

கிழக்குமாகாண விளையாட்டு விழாவிற்கான ஜூடோ போட்டிகள், திருகோணமலை மக்கேசர் உள்ளக விளையாட்டு அரங்கில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவானவர்களுக்கான போட்டிகள் இடம்பெற்றன. இப்போட்டிகளில் மட்டக்களப்பை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய வீர, வீராங்கனைகள் ஆறு தங்கப் பதக்கங்களையும், ஆறு வெள்ளிப் பதக்கங்களையும், ஆறு வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 13 செப்டெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.